# அங்காடி

ஞா. தியாகராஜன்

இது முடிந்திருக்கிறது
இத்துடன் எல்லாம் முடியவில்லை
மீண்டும் வரும் ஒரு புகார்
இந்தமுறை உன் பேரில் எந்தத் தவறுமில்லையென்று
கம்மியான குரலில் கெஞ்சிக் கொண்டிருப்பாய்
இறுதியாக உனக்கு விருப்பமான நிலவைப் பார்த்த நாள்
ஞாபகத்திலேயே இல்லாமல் போயிருக்கும்
கூச்சல் ஓய்ந்த இரவுகளின் மறுநாள்
செய்வதற்கானத் திட்டங்கள் எதுவும் இருப்பதில்லை
ஏதோ ஒன்றைத் தொடங்கி ஏதோ ஒன்றை முடித்துக்கொள்ள
வேண்டியிருக்கிறது

நித்தமும்
சமப்பட்டிருக்கிறது கிறக்கம்
தவறிய நினைவு மீண்டிருக்கிறது கொஞ்சம்
மன்னிக்கவும் நான் இப்போது தண்டனை காலத்தில் இருக்கிறேன்
முடிந்ததும் அடுத்து கண்டிப்பாக உங்கள் குற்றச்சாட்டு தான்

அங்காடி தெருவின் எந்த முகங்களும் நீயிருப்பதாக
காட்டிக்கொள்ளவில்லை
அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது
உன் பரிந்துரைகள் செல்லாதென்பது.
குழந்தைகளைப் பிடித்துக்கொண்டு வண்டியோட்டும் அப்பாக்கள்
ஒலி எழுப்புகின்றனர் நடுதெருவிலிருந்து உன்னை தள்ளிப்போகச் சொல்லி
கடைவிரித்திருப்பவர்களுக்கு உன் வருகை அவ்வளவு மகிழ்ச்சியாக
இல்லை
மென்று அதக்கி அக்கியெனத் துப்பியிருக்கிறது
உன்னை இந்த காலம்
நரகக்லாய் உன்னை நீ உணர்வதில் எந்த அதிஉணர்வுகளும் கிடையாது
எதுவாயிருந்தாலும் காவியேறிய அந்த பழைய நினைவுக் காகிதங்களை
குப்பையில் போடு
அந்த கடைசியில் எதற்காகவோ உணவளித்துக்கொண்டிருக்கிறார்கள்
போ..

அரைபாதி முட்டாள்
ஒருபாதி பைத்தியம்
சிலமுறை ஒத்துவரும் ஆலோசனை
சுயமாய் முடிவெடுத்து வசமாய் மாட்டிக்கொண்டிருக்கிறேன்.
புத்திசாலி. சில விடயங்களில் ஒன்றும் தெரியாதவன்
மிரட்டி வாங்கும் அதிகாரம். ஒருசமயம் வாங்கிக்கட்டி கொள்ளும் வேலை
சிறப்பாய் முடித்துக்கொடுத்துவிடுவேன் ஒருசிலவற்றை
சொதப்பி காலை வாரிவிடுவேன் சிலவற்றை
ஒரு நாள் கடையில்
ஒரு நாள் கம்பெனியில்


ஓவியம்: ராஜராஜன்

இடைஇடையே அவமானம் அரிதாக பாராட்டு
முழுமையாய் இருப்பதில் என்ன சுவாரஸ்யம்
எப்பவும் என்னவும் நிகழும் அரைகுறைகளுக்கு.



ஊனத்தை எழுதுவது ஆகாது
சாமர்த்தியசாலிகள் இவர்கள்
இரண்டு திசைகளில் பிரியும் பாதைகள் தரப்பட்டுள்ளன
உன் வழித்தடத்தில்
சோதனை முயற்சிகளில் எழுதிப்பார்த்தாய் உன் பலவீனத்தை
அவனை நிரூபித்துவிட அவனும் நிறைய செய்து பார்த்தான்
ஆளில்லாத ஒரு ரயில்வே கிராஸிங் நோக்கி விரைந்து கொண்டிருக்கும்
அதே வேளையில் குளிரூட்டப்பட்ட கார்
ஒரு தேநீர் அருந்த நாற்கர சாலையின் ஓரத்தில் நிறுத்தப்படுகிறது
கீழ்வானத்தின் சூரியன் உச்சியேறும் உக்கிர மதியத்தில்
குஷன் மெத்தையில் சோர்ந்து விழுகிறீர்கள்
முதல் பொம்மையை கூட விற்காதவன் இன்று வேலை போய்விடும்
வருத்தத்தில் உணவருந்தாமல் பஞ்சடைத்த பொம்மைகளை
வெறித்துக்கொண்டிருக்கிறான்
கூட்டத்தில் கலந்துகொள்ள வாசனை திரவியங்களை பூசி
நீங்கள் தயாரான போது இதற்கு முன் எத்தனை இடங்களில்
வேலைபார்க்க நேர்ந்தது என்பதை கணக்குப் போட்டுப் பார்க்கிறான்
துரதிர்ஷ்டசாலி
ஒரே நிறுத்தத்தில் முடியும் பயணத்திற்கு இத்தனை கிளைபாதைகளை
யார் உருவாக்கியது

இருந்ததற்கும் இருப்பதற்கும் இருக்கப்போவதற்கும்
இடையில் சுற்றுகிறது சக்கரம்
வெயில் கடந்து இரவு ஒளிரும் காலையில்
உனக்குத் தரப்பட்ட நாட்களில் ஒன்று எவ்வளவு அழகாக தீர்ந்து
போயிருக்கிறது
காலியாகும் பற்பசைகள்
கரைந்து போகும் சோப்புகள்
வெறும் டப்பாவாக மிஞ்சும் ஷாம்புகள்
ஒரு நாள் உபயோகமில்லாமல் போய்விடும் புதிய உடுப்புகள்
கழட்டியெறியப்படும் செருப்புகள்
யார் யாரையோ இறக்கிவிட்டு போகும் அரசு பேருந்து
ஏதேதோ முகங்கள்
பலவிதமான கரங்கள்
மிருதுவிலும் பல வகைகள்
எத்தனையாவது மாடியில் சாவு வருகிறதோ அதற்குமேல்
இந்த படிகளை நாம்
ஏறவேண்டியிருக்காது.
வரிசையில் நிற்கும் அவகாசத்திற்குள்
ஒரு ஸ்நேகத்திற்காக நாம் ஏன் நண்பா இவ்வளவு துடிக்கிறோம்.. ?

- ஏரா. தியாகராஜன்